# 27. கலைச் சொற்கள்

தகவல் தொடர்பு சாதனங்கள், பிரயாணம் ஆகியவற்றால் பெரிய உலகமானது இன்று மிகச் சிறியதாகிவிட்டது. தூரத்தைக் குறைத்து, நேரத்தைச் சுருக்கி மனிதன் சாதனை படைத்துவிட்டான். புதிய, புதிய கண்டுபிடிப்புகளால் அனைத்து நாடுகளும் புதுவாழ்வைத் தொடங்கிவிட்டன. புதுவாழ்வுக்கு ஏற்ப கண்டுபிடிப்புகளுக்கேற்ப ஒவ்வொரு மொழியிலும் புதுப்புதுச் சொற்கள் உருவாகிக் கொண்டு இருக்கின்றன. இதற்குத் தமிழ்மொழியும் விதிவிலக்கல்ல. தமிழ் மொழியில் கலந்துவிட்ட அயல்நாட்டுக் கலைச்சொற்களை அப்படியே ஏற்றுக்கொள்வது சிறப்புடையதா? என்ற எண்ணம் எழுகிறது. ஆனால் நடைமுறைக்கு ஏற்ற நிலையில் தமிழ்க்கலைச் சொற்களைப் பயன்படுத்துவதில் எந்தவிதச் சிக்கலும் இல்லை. அறிவியல் கலைச் சொற்களில் ஏற்கக் கூடிய சொற்களைக் கலைச் சொல்லாக்கித் தமிழில் வழங்குவதில் தவறில்லை. முடியாதபட்சத்தில் அவ்வாறே வழங்கிவிடுவது மேலானது. சான்றாக, ரப்பரை ரப்பர் என்றே எழுத வேண்டும். இகரம் சேர்த்தால் யாசிப்பவர் என்று பொருட் சிதைவு ஏற்படும். ஆப்பிளை ஆப்பிள் என்றே கூற வேண்டும்.

மனித வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் வளர்ச்சி நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றது. இந்த வளர்ச்சி இரண்டு வகைகளில் அமைகிறது. ஒன்று குறிப்பிட்ட மக்களினத்தின் அக வளர்ச்சியால் உருவாகின்றது. மற்றது புற வளர்ச்சியால் அமைகின்றது. இவ்விரு வளர்ச்சிகளையும் மொழி பதிவு செய்தல் வேண்டும்.

தமிழ்மொழியைப் பொறுத்தவரையில் அக வளர்ச்சி என்பது தமிழ் மக்களால் உருவாக்கிக் கொள்ளப்பட்ட கருத்துக்களையும் கண்டுபிடிக்கப்பட்ட கருவிகளையும் குறிப்பதற்குத் தேவைப்படும் சொற்கள் இயல்பாகத் தமிழிலேயே அமைந்துவிடுகின்றன.

புறவளர்ச்சி என்பது பிறநாட்டின் அல்லது பிற மொழியினரால் உருவாக்கப்பட்ட கருத்துகளையும் தமிழ்நாட்டிற்குத் தமிழ் மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதைக் குறிப்பதாகும். இதற்குத் தமிழ் மொழியில் புதிய கலைச் சொற்களைப் படைக்க வேண்டியுள்ளது.

கலைச் சொல்லாக்கம் என்பதற்குத் துறைசார் சொற்களை உருவாக்குதல் என்று பொருள் கூறலாம். இக் கலைச் சொல்லாக்கம் கலையியல் துறைகள், அறிவியல் துறைகள் என இருவகைத் துறைச் சொற்களையும் குறிப்பதாகும். இவ்விரு வகையில் அறிவியல் துறைகளில்

வளரும் பல்வகைப்பட்ட அறிவியல் கருத்துக்களைத் தமிழ் ஏற்றுக்கொள்வதற்கு அறிவியல் கலைச்சொல்லாக்கம் பயன்படுகிறது.

தமிழில் கலைச்சொற்களை உருவாக்கும்போது பின்வரும் மூன்று கருத்துக்களைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

- வடிவில் சிறியதாக இருத்தல்
- எளிதில் விளங்கும் தன்மையில் இருத்தல்
- கூடுமானவரையில் தனித்தமிழ்ச் சொல்லாக இருத்தல்

பல்வேறு அறிவியல் துறைகளில் வழங்கும் இன்றியமையாத கலைச்சொற்களுக்கான தமிழாக்கம் பின்வருமாறு:

## விண்வெளிக் கலைச் சொற்கள்

Galaxy - விண்மீன் மண்டலம்
(வடமொழியில் நட்சத்திர மண்டலம்)

Light year - ஒளி ஆண்டு

Star - விண்மீன்

Gravity - புவியீர்ப்பு

Orbit - சுழல் பாதை

Remote control - தொலைக் கட்டுப்பாடு

Ultra violet - புறஊதா

Velocity - நேர்வேகம்

Telescope - தொலைநோக்கி

Space Station - விண்வெளி நிலையம்

## கணினியியல் கலைச் சொற்கள்

Computer - கணிப்பொறி, கணிப்பான், கணினி

Chip - சில்லு

Cursor - சுட்டி

Disc - வட்டு

Compact Disc - கையக வட்டு

Floppy Disc - நெகிழ் வட்டு

Monitor - கணினித் திரை
Multimedia - பல் ஊடகம்
Network - வலையகம்
Input - உள்ளீடு
Output - வெளியீடு
Key board - சாவிப்பலகை
Online - உடனடி முறை
Program - கட்டளை நிரல்
Software - மென்கலம் – மென்பொருள்
Hardware - வன்கலம் – மென்பொருள்
Mouse - சுண்டி, சுட்டி
Debugger - பிழைநீக்கி
Video Cassette - ஒளிப்பேழை
Audio Cassette - ஒலிப்பேழை
Data - தரவு, தகவல்
Electronic Mail - மின்னணு அஞ்சல்
Internet - இணையம்

**பொதுவான கலைச்சொற்கள்**

Agency - முகமை
Anthropology - மானிடவியல்
Archeology - தொல்லியல்
Pollution - மாசு
Heavy Vehicle - கனரக வாகனம்
Broadcast - ஒலிபரப்பு
Telecast - ஒளிபரப்பு
Modernization - நவீனமயமாக்கல்
Globalisation - உலகமயமாக்கல்
Liberalisation - தாராளமயமாக்கல்

CPA College
BAK